**O.S. 261/2015**

Date: 05.08.2024

Dw–1 – இசக்கி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்)**

1. வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவா சுவர் என்னுடைய சுவராகும், அதை அவருடைய சுவர் என்று பரிகாரம் கோரியுள்ளார். வாதி வீட்டிற்கு தென்புறத்தில் என் வீடும், என் மனைவி வீடும் உள்ளது என்றால் சரிதான். வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய யார் வழக்கறிஞரிடம் விபரம் சொன்னது என்றால் என் மனைவி என்னிடம் சொல்லி அதை நான் வழக்கறிஞரிடம் சொன்னேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் என் வீடு உள்ள தெருவும், என் மனைவி வீடு உள்ள தெருவும் வேறு வேறு என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ–4 முதல் பி.சா.ஆ–8 வரையிலான ஆவணங்களில் ஆத்தியடி தெரு என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே, என் நிரூபண வாக்குமூலத்தில் நான் வேறு தெருவிலும், என் மனைவி வேறு தெருவிலும் குடியிருந்து வருவதாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான். நான் கிரயம் வாங்குவதற்கு முன்பாகவே வாதியின் தாத்தா சங்கரன் ஆசாரி அவருடைய சொத்தை கிரயம் பெற்றுவிட்டார் என்றால் சரிதான். வாதியின் தாத்தா பெயரில் உள்ள கிரய பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வாதி என்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3. வாதி என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்று தெரியாமல்தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளோம், ஆனால், அது என் மனைவியின் சொத்தாகும். என் மனைவி இந்த வழக்கில்

Sd/–Tr.P.Kumar,PDM(FAC) Sd/–இசக்கி

தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தினை அளவீடு செய்வதற்கு நீதிமன்ற ஆணையர் தாவா இடத்திற்கு வந்தார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கைக்கு நான் ஆட்சேபணை ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததை காட்டுவதற்கு ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் மின்வாரியத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன்.

4. பி.சா.ஆ–3 ஆவணத்தில் கல்லிடைக்குறிச்சி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தும் பலன் இல்லை என சொல்லியுள்ள நிலையில் எப்போது புகார் கொடுத்தேன் என்றால் வாதிகள்தான் புகார் கொடுத்தார்கள், போலீசார் வந்து பார்த்துவிட்டு நான் சரியாக கட்டிடம் கட்டியுள்ளதாக சொல்லிவிட்டார்கள். நீதிமன்றம் மூலம் பார்த்துக்கொள்ளும்படி காவல்துறையினர் தெரிவித்து விட்டார்கள். வா.சா.ஆ–4 ஆனது 24.05.2014 ம் தேதியில் கொடுக்கப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ–1 ஆவணத்தில் வடக்கே ராயப்பபிள்ளை வகையறா கடை பொதுச்சுவருக்கும் வடக்கு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 1984 ல் கிரயம் வாங்கினேன் என்றால் சரிதான். பி.சா.ஆ–4 ஆவணத்தில் உள்ள தபசில் சொத்தின் வடக்கு எல்லையாக கிழமேல் பொதுச்சுவர் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வாதிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது) Sd/–இசக்கி

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பித்து சாட்சி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட பின்பு என்னால் சான்றொப்பம் இடப்பட்டது.

Sd/-Tr.P.Kumar,PDM(FAC)
கூ.மா.உ.நீ.
அம்பாசமுத்திரம்.